# பிரதான தரவு ஆவணம்
## வணிக சேவைகள்

| | |
|---|---|
| தகைமை | 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய இலங்கையில் வதிவிட உரிமையுடைய நபர்கள் |
| திறைசேரி தயாரிப்புகளின் வகைகள் | வர்த்தகச் சேவைகள் சார்ந்த தீர்வுகள் வட்டி அற்றவையாகவும், சமத்துவம் மற்றும் நியாயத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவையாகவும் உள்ளன. இது, வாடிக்கையாளர்களின் இன பேதமின்றி, தகுதியுடைய அனைவருக்கும் கிடைக்கப் பெறுகிறது. அனைத்துப் பொருட்களும் ஷரியத் மேற்பார்வைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, அத்துடன் வழக்கமான ஷரியா ஆய்வுகளுக்கு உட்பட்டவை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைக்கு உட்பட்டவை. |
| தயாரிப்பு வகைகள் | **இறக்குமதிகள்**<br>• ஆவணச் சான்று கடனின் கீழ் இறக்குமதிகள் (காட்சி மற்றும் தாமதக் கொடுப்பனவு) • வசூலிப்புகளின் கீழ் இறக்குமதிகள் (DP & DA) • இறக்குமதி நிதிவசதியளிப்புகள் • கப்பல் போக்குவரத்து உத்தரவாதங்கள்<br>**ஏற்றுமதிகள்**<br>• வசூலிப்புகளின் கீழ் ஏற்றுமதிகள் (DP & DA) • ஆவணச் சான்று கடன்களின் கீழ் ஏற்றுமதிகள் (காட்சி மற்றும் தாமதக் கொடுப்பனவு)<br>**உத்தரவாதங்கள்**<br>• பொது உத்தரவாதங்கள் • சுங்கப் பிணைப்பத்திரங்கள் • ஏலப் பிணைப்பத்திரங்கள் • செயல்திறன் உத்தரவாதங்கள் • முற்பண கொடுப்பனவு உத்தரவாதங்கள்<br>**ஏனையவை**<br>• இதர வர்த்தகத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் |
| இறக்குமதி முரபாஹ் (செலவு மற்றும் சேர்மதிகள்) | முரபாஹ் என்பது ஒரு பொருளை விற்பனை செய்வதைக் குறிக்கிறது, இதில் விற்பனையாளர் வாங்குபவருக்கு ஒரு குறிப்பிட்ட பொருளை (இறக்குமதி சரக்கு) வழங்குவதற்கு ஒப்புக்கொள்கிறார்; அந்தப் பொருளின் அசல் செலவுடன் (செலவுகள்) ஒப்புக்கொள்ளப்பட்ட இலாபத்தை (இலாப விகிதத்தை) சேர்த்துக் கொள்வார்.<br>**அடிப்படை விதிகள்**<br>முரபாஹ் என்பது ஒரு பொருளை (இறக்குமதி சரக்கு) விற்பனை செய்வதாகும். எனவே, ஒரு செல்லுபடியான இஸ்லாமிய விற்பனைக்குத் தேவையான அனைத்து நிபந்தனைகளையும் அது நிறைவேற்ற வேண்டும். இந்த ஒப்பந்தத்தை செல்லுபடியாக்குவதற்கு விற்பனை ஒப்பந்தத்தின் பின்வரும் விதிகள் முக்கியமானவை.<br>**1) விற்பனை நடக்கும் நேரத்தில் பொருட்கள் இருக்க வேண்டும்.** |

| | |
|---|---|
| | **2) விற்பனை நடக்கும் நேரத்தில் பொருட்கள் விற்பனையாளரின் உடைமையில் (சொந்தத்தில்) இருக்க வேண்டும்.**<br>**3) விற்பனை நடக்கும் நேரத்தில் பொருட்கள் விற்பனையாளரின் பௌதீக அல்லது ஆக்கபூர்வமான உடைமையில் இருக்க வேண்டும்.**<br>**4) விற்பனை உடனடியாகவும் மற்றும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும்.**<br>எனவே, அமனா வங்கி முதலில் பொருட்களைக் (இறக்குமதி) கொள்முதல் செய்து, அதன்மீது ஆக்கபூர்வமான உடைமையை பெற்ற பின்னர், அதனை வாடிக்கையாளருக்கு விற்கிறது.<br><br>***பிணை / ஈட்டுறுதி***<br>*அமானா வங்கியின் இடர் ஆளுகையை ஈடுசெய்யும் அளவிற்கு, வாடிக்கையாளர் போதுமான பிணையம் / ஈட்டுறுதியை வழங்க வேண்டும்.*<br>***முக்கிய அம்சங்கள்***<br>• *சொத்துக்களின் பின்புலத்தில் நிதி வசதியளிப்பு*<br>• *வெளிப்படையான நிலையான விலையிடல்*<br>• *பொருட்கள் கொள்வனவு மற்றும் விற்பனையின் போது அமானா வங்கி முழு உரிமையாண்மையையும் இடரையும் பெறும்*<br>• *ஷரீஆ விதிமுறைக்குட்பட்டது*<br>• *மறைந்திருக்கும் கட்டணங்கள் அற்றது*<br>• *கையாளல் கட்டணம் அற்றது*<br>• *வட்டி வீத தளம்பல் இடர் அற்றது* |
| இறக்குமதி முசாவமா (ரொக்கத் தொகை நிதிவசதியளிப்பு) | முசாவமா (Musawamma) என்பது ஒரு சாதாரண பரிவர்த்தனையாகும், இதில் விற்பனையாளர் தனது செலவுக் (அசல்) விலையை வெளியிடாமல் தனது பொருளை விற்பனை செய்வதாகும். பொருட்களின் கூடுதல் செலவைக் கணக்கிட முடியாத சூழ்நிலைகளில் அமானா வங்கி இந்தத் தீர்வை பின்வரும் சந்தர்ப்பங்களுக்காக வழங்குகிறது:<br><br>**a) கப்பல் போக்குவரத்து ஆவணங்கள் வந்து சேருவதற்கு முன்னரே சரக்கு வந்து சேர்தல். (கப்பல் போக்குவரத்து உத்தரவாதத்தின் கீழ் சரக்கு விடுவிப்பு)**<br>**b) தாமதக் கொடுப்பனவு / ஏற்றுமதி: இதில் விநியோகஸ்தருக்கான உண்மையான கொடுப்பனவு எதிர்காலத் திகதியில் செய்யப்படுகிறது.**<br>முசாவமா என்பது ஒரு நிதியளிப்பு முறையாகும், இது ஒட்டுமொத்த நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்ய அனுமதிக்கிறது; இதன் மூலம் துறைமுகத்தில் இருந்து வாடிக்கையாளரின் களஞ்சியத்திற்குப் பொருட்களை விடுவிப்பதை (தடையின்றிச் செல்வதை) இது எளிதாக்குகிறது. |
| உத்தரவாதமளிப்பு பற்றுச்சீட்டு (தாமான்) | தாமான் (Dhaman) என்பது ஒரு நபர், கடனாளி, விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்தக்காரரால் நிறைவேற்றப்பட வேண்டிய எந்தவொரு கோரிக்கைகள், கடன்கள் அல்லது கடமைகளுக்கும் உறுதியளிக்கும் ஒரு ஒப்பந்தமாகும். |

| | |
|---|---|
| | அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், அந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஜாமீன் அளித்தவர் (உறுதியாளர்) பொறுப்பாவார். |
| கட்டண அடிப்படையிலான சேவைகள் (வகலாஹ்) | வகலாஹ்த்தின் (Wakala) கீழான வர்த்தகச் சேவைகள், ஒரு நபர் மற்றொரு நபரைத் தனக்காக சில பணிகளைச் செய்ய அதிகாரம் அளிப்பதை உள்ளடக்கியது, அதன் மூலம் பிந்தையவர் (முகவர்) பரிவர்த்தனையை நிறைவேற்றப் பொறுப்பாவார். வாடிக்கையாளர் 'முதல்வர்' ஆவார், மேலும் வங்கி அவரது முகவராகச் செயல்படுகிறது. வங்கியால் எந்த நிதியுதவியும் வழங்கப்படுவதில்லை; மேலும் பரிவர்த்தனைக்கான முழுத் தொகையையும் வழங்கும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் சேவைக்காக ஒரு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது அனைத்து வர்த்தகச் சேவைகளுக்கும் பொருந்தும். |
| கட்டணங்கள் மற்றும் கூலி | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் எமது நிறுவன இணையத்தளத்தில் காணப்படும்: https://www.amanabank.lk/tariff-services.html |
| நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | தயாரிப்பின் தகவல்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன காலா காலத்தில் மாறுபடும். எனவே, பிந்திய தகவல்கள் மற்றும் தற்போது அமலிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அருகிலுள்ள கிளையுடன் தொடர்பு கொள்ளவும் அல்லது எமது நிறுவன இணையத்தளத்தை பார்க்கவும்: https://www.amanabank.lk/pdf/application-downloads/general-business-conditions.pdf |
| கருத்தளிப்பு மற்றும் முறைப்பாடுகள் | எமது வாடிக்கையாளர் தீர்வுகள் நிலையத்துடன் 24x7 நேரமும் நீங்கள் தொடர்பு கொண்டு, உங்கள் கருத்துகளையும், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளலாம். உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக எமது அணியினர் தயாராக இருப்பார்கள்.<br><br>வாடிக்கையாளர் தீர்வு நிலைய இலக்கம் :+94 11 7 756 756<br>மின்னஞ்சல் : info@amana.lk \| feedback@amana.lk<br>எமது இணையத்தளத்தில் உங்களின் விசாரணைகளை சமர்ப்பிப்பதற்கு www.amanabank.lk<br><br>எவ்வாறாயினும், உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம்:<br>The Manager - Service Quality Assurance<br>Amana Bank,<br>No. 486, Galle Road, Colombo 03<br>அல்லது e-mail servicequality@amana.lk |
| | அதன் பின்னரும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், சுயாதீன நிதி குறைகேள் அதிகாரியின் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நிதிசார் குறைகேள் அதிகாரியின் பின்வரும் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.<br><br>Financial Ombudsman,<br>No.1, Bethesda Place, Milagiriya, Colombo 04.<br>Telephone: + 94 11 2595624 Fax: +94 11 2595625 |

| | |
|---|---|
| | Website: www. nancialombudsman.lk |